தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 143/ந/2022
நாள். 17.10.2022

திருமதி.D.முத்துமாரி,
நாகப்பட்டினம். – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
நாகப்பட்டினம் நகராட்சி. – எதிர் மனுதாரர்.

நாகப்பட்டினம், காடம்பாடி, சாலமன் தோட்டம், கதவு எண்.33 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.D.முத்துமாரி என்பவரின் 09.09.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.09.2022 அன்று பெறப்பட்டு 143/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நாகப்பட்டினம், காடம்பாடி, சாலமன் தோட்டம், கதவு எண்.33 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.D.முத்துமாரி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த உலகின் முன் மாதிரி திட்டமான, மகத்தான திட்டமான பள்ளி மாணவ – மாணவியருக்கு காலை சிற்றுண்டி வழங்க நகராட்சி சார்பில் வண்டிப்பேட்டை அருகே உயர்திரு மாவட்ட ஆட்சியர் அவர்கள் இடம் தேர்வு செய்து, ஒருங்கிணைந்த சமையல்கூடம் கட்ட நகராட்சிக்கு அனுமதி அளித்துள்ள நிலையில், அனுமதிக்கு மாறாக, உயர்திரு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தேர்வு செய்த இடத்தில் கட்டாமல், நகராட்சிக்கு சொந்தமான, நல்ல சுகாதாரமான நிறைய இடங்கள் இருக்கும் நிலையில் நகராட்சி பொறியாளர் அவர்கள் யாரிடமும் எந்த அனுமதியும் பெறாமல், தன்னிச்சையாக, தன் சுயலாபம் மற்றும் நகராட்சி பொறியாளரின் மறைமுக பங்குதாரர் திரு.P.ரகுநாதன் அவர்களின் சுயலாபத்திற்காக அரசு மருத்துவமனையின் பின்புறம் நாய்கள் குடும்பகட்டுப்பாடு மையம், குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கும் கூடம், மிக அதிகமாக பன்றிகள் மேயும் இடம், சுகாதாரமற்ற, நோய்த்தொற்று அபாயம் உள்ள பகுதியில் சின்னஞ்சிறு

குழந்தைகள், மாணவ—மாணவியருக்கு காலை சிற்றுண்டி தயாரிக்கும் ஒருங்கிணைந்த சமையல் கூடம், கட்டுவது தவறானது. மேலும் அரசு ஒப்பந்த விதிமுறைகளின்படி கட்டப்படாமல் தரமற்ற பொருட்களை கொண்டு தரமற்ற முறையில் கட்டப்பட்டு வருகிறது. நகராட்சி பொறியாளர் அவர்கள் தரமற்ற கட்டுமானத்தை தன் சுயலாபம் கருதி முறைகேடாக அங்கீகரித்து வருகிறார்.

மேலும் நாகப்பட்டினம் நகராட்சியின் கட்டுப்பாட்டில் இரண்டு அம்மா உணவங்கள் சிறப்பான முறையில் இயங்கி வருகிறது. அங்கேயே போதுமான சமையல்கூடம், பாத்திரங்கள் உள்ளது. அம்மா உணவங்களில் பள்ளி மாணவ – மாணவியருக்கு வழங்கப்படும் காலை சிற்றுண்டி தயாரிக்கும் பணி செய்தால் அரசுக்கும், நாகப்பட்டினம் நகராட்சிக்கும் ரூ 23 லட்சம் மற்றும் எதிர்கால செலவினங்கள் பல லட்சம் ரூபாய் சேமிக்கப்படும் வாய்ப்பு உள்ளது.

மேலும் நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான இடங்கள் இன்னும் நிறைய உள்ள நிலையில் ஸ்ரீ நீலாயதாட்சி அம்மன் திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் சமையல்கூடம் கட்டுவது தவறான முடிவு.

எனவே, 2 அம்மா உணவகங்களிலேயே காலை சிற்றுண்டி சமைத்திட ஆவன செய்து நகராட்சியின் பணத்தை, மக்களின் பணத்தை, தமிழ்நாடு அரசின் பணத்தை சேமித்து வேறு அத்தியாவசிய திட்டங்களுக்கு செலவிட ஆவன செய்ய வேண்டுகிறேன்.

உயர்திரு மாவட்ட ஆட்சியர் அவர்கள் தேர்வு செய்த, நகராட்சி அனுமதி வழங்கிய இடத்தில் ஒருங்கிணைந்த சமையல்கூடம் கட்டாமல், தன்னிச்சையாக, முறைகேடாக, சுயலாபம் கருதி சுகாதாரமற்ற, நோய்தொற்று அபாயம் உள்ள பன்றிகள் மேயும் இடத்தில் ஒருங்கிணைந்த சமையல்கூடம் கட்ட அனுமதி அளித்த நகராட்சி பொறியாளர், நகராட்சி ஆணையர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 20.09.2022 நாளிட்ட கடிதம் மூலம் நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

நாகப்பட்டினம் நகராட்சி ஆணையாளர் தனது 28.09.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தமிழக சட்டமன்ற பேரவையில் விதி எண்.110—ன் கீழ் அரசு துவக்கப்பள்ளி மாணவ மாணவியருக்கு பள்ளி வேலை நாட்களில் காலை சிற்றுண்டி வழங்க அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதன்படி நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட 11 நகராட்சி துவக்கப்பள்ளிகளில் காலை சிற்றுண்டி தயார் செய்வதற்கு வார்டு எண்.17 வண்டிபேட்டை பகுதியிலுள்ள பழைய பயன்பாடற்ற சமுதாய கூடத்தை இடித்துவிட்டு அந்த இடத்தில் ஒருங்கிணைந்த சமையல் கூட கட்டடம் கட்டுவதற்கு கள ஆய்வு செய்த போது, அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து அந்த இடத்தில் சமுதாய கட்டடம் கட்டி

வழங்க வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டதன் பேரில் நகர்மன்ற தலைவர், ஆணையர், நகராட்சி பொறியாளர், நகர சார் ஆய்வாளர் ஆகியோருடன் சேர்ந்து கள ஆய்வு மேற்கொண்டு மாற்று இடமாகவும், 11 பள்ளிகளுக்கும் தயார் செய்யும் காலை சிற்றுண்டி உரிய நேரத்தில் கொண்டு சேர்ப்பதற்கு ஏதுவாகவும், பள்ளிகளின் தூரத்தை கணக்கிட்டு நாகப்பட்டினம் மற்றும் நாகூர் இடையில் மையமாக இடம் தேர்வு செய்ததன்படி நாகப்பட்டினம் நகராட்சி வார்டு எண். 23, கூக்ஸ் சாலைப்பகுதியில் தற்போது புதிதாக கட்டப்பட்டுள்ள இடம் தேர்வு செய்யப்பட்டது. நகராட்சித்துறையால் மேற்கொள்ளப்படும் அனைத்து திட்டங்களும் செயல்படுத்துவது என்பது தன்னிச்சையாக எந்த ஒரு முடிவும் எடுக்க இயலாது. மேலும், மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரடியாக ஆய்வு செய்தும், நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் மூலமாக முதலமைச்சர் அவர்களின் காலை சத்துணவு சிறப்பு திட்ட அலுவலரின் அனுமதி பெற்றும், விதிமுறைகளுக்குட்பட்டு மேற்படி கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது என்ற விவரம் மாண்பமை முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், புகார் மனுவில் ஒருங்கிணைந்த சமுதாயக்கூட கட்டடம் கட்டப்பட்டுள்ள இடத்தின் அருகில் உள்ள கட்டடத்தில் செயல்பட்டு வந்த நாய்கள் கருத்தடை மையம் கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்துவது இல்லை.

அம்மா உணவகம் ஏழை எளியோர் பயன்படுத்துவதற்காக அரசின் கொள்கை முடிவின்படி செயல்பட்டு வருகிறது. அம்மா உணவகத்தில் இருந்து காலை சிற்றுண்டி தயார் செய்து வழங்க எந்தவிதமான அரசாணை மற்றும் உத்தரவுகள் ஏதும் வழங்கப்படவில்லை. இவற்றில் மனுவில் குறிப்பிட்டுள்ளப்படி தன்னிச்சையாக எந்த முடிவும் எடுக்க இயலாது. ஒருங்கிணைந்த சமையல் கூட கட்டடம் பள்ளி வளாகம் அல்லது மாற்று இடத்தில் புதிதாக கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்கப்படுகிறது.

அரசின் உத்தரவின்படி கட்டி முடிக்கப்பட்ட ஒருங்கிணைந்த சமையல்கூட கட்டடத்தை சுற்றிலும் சுற்று சுவர் அமைக்கப்பட்டு சுகாதாரமான முறையில் காலை சிற்றுண்டிகள் தயார் செய்து 11 நகராட்சி துவக்கப்பள்ளிகளுக்கும் நல்லமுறையில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் உணவு பாதுகாப்பு அலுவலர் மூலம் அவ்வப்போது உணவின் தரம் சோதிக்கப்படுகிறது என்ற விவரம் முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்கப்படுகிறது. இவற்றில் எவ்விதமான முறைகேடுகள் ஏதும் இல்லை என்பதை மாண்பமை முறைமன்ற நடுவத்திற்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும், நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரும் 06.10.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.09.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) 06.10.2022 அன்றைய விசாரணைக்கு மனுதாரர் திருமதி.D.முத்துமாரி என்பவருக்கு உடல்நலம் சரியில்லாத காரணத்தினால் அவர் சார்பாக அவரது ஒன்றுவிட்ட சகோதரர் திரு.எஸ்.ரகுநாதன் என்பவரை விசாரணைக்கு அனுமதியளிக்கும்படி கோரிய மனுதாரர் திருமதி.D.முத்துமாரி அளித்த ஒப்புதல் கடிதத்தினை இம்முறைமன்ற நடுவம் ஏற்று கொண்டு

அதன்படி திரு.எஸ்.ரகுநாதன் என்பவர் 6.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் கலந்து கொண்டு பின்வருமாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“நாகப்பட்டினம் நகராட்சியில் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி வழுங்க நகராட்சி சார்பில் வண்டிப்பேட்டை அருகே நாகப்பட்டினம் ஆட்சியர், இடத்தை தேர்வு செய்து ஒருங்கிணைந்த சமையல்கூடம் கட்ட அனுமதிக்கப்பட்ட இடத்தில் கட்டாமல், ஸ்ரீநீலாயதாட்சி அம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமான இடத்தில் அனுமதி ஏதும் பெறாமல் கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்திற்கு அருகில் நாய்களுக்கான கருத்தடை மையம், அருகில் உள்ள மருத்துவமனைகளிலிருந்து மருத்துவ கழிவுகள் கொட்டும் இடத்தில் கட்டப்பட்டுள்ளது. தொற்று நோய் அபாயம் உள்ள மேற்கண்ட சமையல் கூடம் தரமற்ற முறையில் கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்திற்கு அருகில் இரண்டு அம்மா உணவகங்கள் இயங்கி வருகின்றன. எனவே, மேற்கண்டஇடத்தில் காலை சிற்றுண்டி தயாரிக்கும் பணிகளை மேற்கொண்டால், அரசுக்கும், நகராட்சிக்கும் பல லட்ச ரூபாய் இழப்பை தவிர்க்கலாம் என இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பான புகைப்பட்ங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான நாகப்பட்டினம் நகராட்சி ஆணையாளர் திருமதி. ந. ஸ்ரீதேவி மற்றும் நகராட்சிப் பொறியாளர் திரு.எம். ஜெயகிருஷ்ணன் ஆகியோர் 06.10.2022 நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள்:

“நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட 11 நகராட்சி துவக்கப்பள்ளி மாணவ மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி தயார் செய்வதற்கு வண்டிப்பேட்டை பகுதியில் பயனற்ற பழைய சமுதாய கூடத்தை இடித்துவிட்டு, ஒருங்கிணைந்த சமையல் கூடம் கட்ட கள ஆய்வு மேற்கொண்டபோது, அப்பகுதிவாழ் பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால், பள்ளி மாணவ மாணவியருக்கு காலை சிற்றுண்டி குறிப்பிட்ட நேரத்தில் அளித்திட ஏதுவாக வார்டு எண் 23 கூக்ஸ் சாலைப் பகுதியில் சுகாதாரமான இடம் தெரிவு செய்யப்பட்டு, சமையல் கூடம் கட்டப்பட்டுள்ளது. இக்கூடத்தை மாவட்ட ஆட்சியரும் நேரடியாக ஆய்வு செய்துள்ளார்.

எனவே, விதிமுறைகளுக்கு உட்பட்டு நகராட்சி இடத்தில்தான் கட்டப்பட்டுள்ளது. மாறாக, மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு கோவில் இடத்தில் மேற்கண்ட காலை சிற்றுண்டி கூடம் கட்டப்படவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் இந்நேர்வு தொடர்பாக நாகப்பட்டினம் நகராட்சி ஆணையாளரான எனது 28.9.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் விளக்கமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்” என தெரிவித்துள்ளார்கள்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

நாகப்பட்டினம், காடம்பாடியை சார்ந்த மனுதாரர் திருமதி.D.முத்துமாரி என்பவர் தனது முறையீட்டு மனுவில், பள்ளி மாணவ, மாணவியருக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த சமையல் கூடத்தை கட்ட நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரால் தேர்வு செய்யப்பட்ட வண்டிப்பேட்டை அருகே உள்ள இடத்திற்கு பதிலாக சுகாதாரமற்ற, முறைகேடாக ஸ்ரீநீலாயதாட்சி அம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ளது என புகாராக தெரிவித்துள்ளார்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட 11 நகராட்சி துவக்கப்பள்ளிகளில் செயல்படுத்திட அனைத்து பள்ளிகளுக்கும் பொதுவான ஒரு ஒருங்கிணைந்த சமையல் கூடத்தை ரூ 23 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு முதலில் வண்டிப்பேட்டை பகுதியில் தெரிவு செய்த போது, அப்பகுதி வாழ்மக்களின் எதிர்ப்பின் காரணமாக, அனைத்து பள்ளிகளுக்கும் விரைவில் காலை உணவை அளித்திடும் வகையில் நாகப்பட்டினம் நகராட்சியின் வார்டு எண்.23, கூக்ஸ் சாலைப் பகுதியில் ஒருங்கிணைந்த சமையல் கூடத்தை அமைக்க, நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி அலுவலர்கள் ஆய்வுசெய்து தெரிவு செய்துள்ளதை ஆணையர் சமர்ப்பித்த புகைப்படத்தின் மூலம் அறிய முடிகிறது.

மேற்படி கூக்ஸ் சாலை பகுதியில் ஒருங்கிணைந்த சமையற் கூடம் கட்டுவதற்கு நாகப்பட்டினம் நகராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதை ஆவணத்தின் வாயிலாக அறிய வருகிறது.

சமையற்கூடம் கட்டுமான பொருட்களின் தரம் பட்டுக்கோட்டை, அண்ணா பல்கலைக்கழக தரக்கட்டுப்பாட்டு மையத்தால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் அறியமுடிகிறது.

தற்போது கட்டப்பட்டுள்ள சமையல் கூடத்திற்கு அருகிலுள்ள இடத்தில் செயல்பட்டு வந்த நாய்கள் கருத்தடை மையம் கடந்த 5 ஆண்டுகளாக பயன்பாட்டில் இல்லை என்பது ஆணையரின் அறிக்கையின் மூலம் தெரிய வருகிறது.

சுகாதாரத்துடன் சமையல் மேற்கொள்ளும் வகையிலும் மற்றும் பாதுகாப்பினை கருத்திற்கொண்டும், ஒருங்கிணைந்த சமையல்கூட கட்டடத்தினை சுற்றிலும் சுற்று சுவர் அமைக்கப்பட்டுள்ளதை ஆணையர் சமர்ப்பித்துள்ள புகைப்படத்தின் மூலம் அறிய முடிகிறது.

ஒருங்கிணைந்த சமையல்கூடம் உரிய விதிமுறைகளுக்குட்பட்டு, நகராட்சிக்கு சொந்தமான இடத்தில்தான் கட்டப்பட்டுள்ளது என்றும், மாறாக கோவில் இடத்தில் கட்டப்படவில்லை என்பதும் ஆணையரின் அறிக்கை மூலம் தெரியவருகிறது.

மேற்காணும் சூழ்நிலையில் மனுதாரர் திருமதி.D.முத்துமாரி தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள புகார்களை நிரூபணம் செய்யும் வகையில் போதிய ஆதார ஆவணங்கள்

சமர்ப்பிக்கப்படாத நிலையில், நாகப்பட்டினம் நகராட்சி ஆணையாளரின் அறிக்கையினை ஏற்று, இம்மனு மீதான நடவடிக்கையினை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி.D.முத்துமாரி,
எண். 33, சாலமன் தோட்டம்,
காடம்பாடி, நாகப்பட்டினம்.

2) ஆணையாளர்,
நாகப்பட்டினம் நகராட்சி.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலருக்காக
18/10/22